The Hindu (Tamil)

Dated: 04.07.2024

## வாக்காளர்களுக்கு வழங்க வைத்திருந்த

# வேட்டி, சேலையை கைப்பற்றி பாமகவினர் ஆர்ப்பாட்டம்

**விழுப்புரம்**

விக்கிரவாண்டி தொகுதிக்கு உட்பட்ட ஆசாரங்குப்பம் கிராமத்தில், திமுக கிளைச் செயலாளரும், முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவருமான ராமலிங்கம் வீட்டில், வாக்காளர்களுக்கு வழங்குவதற்காக பதுக்கி வைத்திருந்ததாக வேட்டி, சட்டை, சேலை உள்ளிட்டவற்றை பாமகவினர் நேற்று கைப்பற்றினர். இதையடுத்து, அவற்றை திமுக நிர்வாகி ராமலிங்கத்தின் வீட்டின் முன் கொட்டி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



↑ வாக்காளர்களுக்கு வழங்க பதுக்கி வைத்திருந்ததாக கூறப்படும் வேட்டி, சேலைகளை கைப்பற்றி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாமகவினர்.

ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்த முன்னாள் எம்எல்ஏ திருக்கச்சூர் ஆறுமுகம், "பொதுமக்கள் முன்னிலையில் இதைக் கைப்பற்றி இருக்கிறோம். இதுகுறித்து தேர்தல் அலுவலர்களுக்கு தகவல் தெரிவித்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்றார்.

இதற்கிடையே, காலதாமதமாக வந்த தேர்தல் அதிகாரிகளின் வாகனத்தை முற்றுகையிட்டு. பாமகவினர் போராட்டத்தை தொடர்ந்தனர். மேலும், அங்கு வந்த போலீஸார், வீதியில் வீசப்பட்ட வேட்டி, சேலைகளை அப்புறப்படுத்த முயன்றனர். அப்போது போலீஸார் மற்றும் கட்சியினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர், தேர்தல் பறக்கும் படையினர் வேட்டி, சேலைகளை பறிமுதல் செய்து, அங்கிருந்து கொண்டு சென்றனர்.

இந்நிலையில், விழுப்புரம் ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான பழனியிடம், பாமக வழக்கறிஞர் பாலு, மயிலம் எம்எல்ஏ சிவக்குமார் உள்ளிட்டோர் புகார் அளித்தனர். இது தொடர்பாக வழக்கறிஞர் பாலு செய்தியாளர்களிடம் கூறும்போது, "வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருள் கொடுப்பதாக பலமுறை புகார் கொடுத்தும், இதுவரை நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்தல் அலுவலரின் கட்டுப்பாட்டில் தொகுதி இல்லை.

மாவட்ட தேர்தல் அலுவலரான ஆட்சியர், தேர்தல் விதிகளைப் பின்பற்றி தேர்தல் பணிகளை தொடர வேண்டும் என்று அரசியல் கட்சியினருக்கு சுற்றறிக்கை அனுப்புமாறுவேண்டுகோள் வைத்துள்ளோம். திமுகவினர் நேர்மையான முறையில் தேர்தலை சந்திக்க வேண்டும்" என்றார்.

Dress distribution for voters by DMK party.,
P.M.K party seized the hoarded dress & said that the dress is to give ~~to~~ the voters at vikravandi a.c.

Daily Thanthi

Dated: 04.07.2024

# தேர்தல் அதிகாரி மீது நம்பிக்கை இல்லை

## பா.ம.க. பரபரப்பு புகார்

விழுப்புரம், ஜூலை.4-

விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட ஆசாரங்குப்பத்தில் நடந்த பிரச்சினை தொடர்பாக நேற்று மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டர் பழனியிடம் பா.ம.க.வினர் புகார் மனு கொடுத்தனர். அதன் பின்னர் பா.ம.க. வக்கீல் பாலு, நிருபர்களிடம் கூறியதாவது:-

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் ஆளும் தி.மு.க.வின் அராஜகம் தலைவிரித்தாடுகிறது.

இதுகுறித்து மாவட்ட தேர்தல் அதிகாரியை சந்தித்து நாங்கள் புகார் மனு அளித்துள்ளோம். தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி மீது நம்பிக்கை இழந்துள்ளோம். தி.மு.க.வினர், சட்டவிரோதமாக வாக்காளர்களுக்கு பணம், பரிசுப்பொருட்கள் வழங்கும் பணியில் இறங்கியுள்ளனர்.

எங்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் பிரசாரத்தில் கலந்துகொள்ள வந்த பொதுமக்களை மிரட்டி, அச்சுறுத்தி அவர்களுக்கு பணம் கொடுத்து எங்கள் கூட்டத்திற்கு வரவிடாமல் ஒரு இடத்தில் அடைத்து வைத்தனர். இதுபற்றி 2 போலீஸ் நிலையங்களில் புகார் செய்தும் நடவடிக்கை இல்லை.

தற்போது ஆசாரங்குப்பத்தில் வாக்காளர்களுக்கு வழங்க இருந்த வேட்டி, சட்டை, சேலைகளை கைப்பற்றி தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் கொடுத்த பிறகும் நடவடிக்கை இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

P.M.K party complaints that they don't have faith in Election officer.

Daily Thanthi

Dated: 04.07.2024

### வாக்காளர்களுக்கு வேட்டி-சேலை:

# தி.மு.க. வேட்பாளரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்

## டாக்டர் அன்புமணி ராமதாஸ் அறிக்கை

சென்னை, ஜூலை.4-



வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்ததற்காக தி.மு.க. வேட்பாளரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

### வேட்டி, சேலை

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள விக்கிரவாண்டி தொகுதி ஆசாரங்குப்பம் கிராமத்தில், தி.மு.க. கிளை செயலாளரும், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான ஏ.சி. ராமலிங்கம் என்பவரின் வீட்டில் வைத்து, கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளால் வாக்காளர்களுக்கு லஞ்சமாக வழங்கப்பட்டு வந்த வேட்டி, சட்டை, சேலை உள்ளிட்ட பொருட்களை பொதுமக்கள் முன்னிலையில் பா.ம.க.வினர் கைப்பற்றி. அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

தேர்தல் விதிகளை மீறிய தி.மு.க.வினரின் இந்த சட்டவிரோத செயல் கடுமையாக கண்டிக்கத்தக்கது. தி.மு.க.வின் மக்கள்விரோத செயல்பாடுகளுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் கொந்தளித்துள்ளனர்.

### கண்டனம்

விக்கிரவாண்டி தொகுதியில் மக்களின் கோபத்தை நன்றாக பார்க்க முடிகிறது. இதனால் விக்கிரவாண்டி தொகுதியில் தோல்வியடைந்து விடுவோம் என்று அஞ்சி நடுங்கும் தி.மு.க., அரசு எந்திரத்தின் உதவியுடன் வாக்காளர்களை விலை கொடுத்து வாங்கவும், தேர்தல் நடைமுறையை சீர்குலைக்கவும் முயல்கிறது. இதற்கு தமிழக அரசு அதிகாரிகள் துணை போவது கண்டிக்கத்தக்கது.

விக்கிரவாண்டி தொகுதியில் இடைத்தேர்தல் நியாயமாக நடைபெற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் விரும்பினால், தேர்தல் அதிகாரியாக வெளிமாநிலத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும்.

### தகுதி நீக்கம்

சிறப்பு பார்வையாளர்களை அதிக எண்ணிக்கையில் அமர்த்த வேண்டும். மத்திய துணை ராணுவப் படையினரை அதிக எண்ணிக்கையில் நிறுத்த வேண்டும். இவை அனைத்துக்கும் மேலாக வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்ததற்காக தி.மு.க. வேட்பாளரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

P.M.K party person thiru Anbumani Ramadass said to disqualify the DMK party candidate for distributing dress for voters.

Dinamalar

Dated: 04.07.2024

விக்கிரவாண்டி தேர்தல்

# தி.மு.க., கிளை செயலர் வீட்டில் புடவைகள் பறிமுதல்

விக்கிரவாண்டி, ஜூலை 4–

விக்கிரவாண்டி தொகுதி ஆசாரங்குப்பத்தில் வாக்காளர்களுக்கு வழங்குவதற்காக தி.மு.க., கிளைச் செயலர் வீட்டில் பதுக்கி வைத்திருந்த புடவை, வேட்டி, சட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி, கோலியனுார் ஒன்றியம், ஆசாரங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் ராமலிங்கம். தி.மு.க., கிளைச் செயலர். இவருடைய வீட்டில் வாக்காளர்களுக்கு பரிசாக வழங்க, புடவைகளை பதுக்கி வைத்திருப்பதாக தொகுதி தேர்தல் அலுவலருக்கு புகார் வந்தது.

அதைத் தொடர்ந்து நேற்று, இடைத்தேர்தலுக்கான நிலை கண்காணிப்புக் குழு அலுவலர் இளையராஜா தலைமையில் அதிகாரிகள் ராமலிங்கம் வீட்டில் சோதனை மேற்கொண்டனர். அப்போது, அங்கு பதுக்கி வைத்திருந்த புடவைகள், வேட்டி, சட்டைகளை பறிமுதல் செய்தனர்.

இதையறிந்த, அங்கிருந்த பா.ம.க., நிர்வாகிகள், ஆசாரங்குப்பம் கிராமத்தில் சில வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த புடவைகள் உள்ளிட்ட துணிகளை எடுத்து வந்து தெருவில் கொட்டி, கோஷம் எழுப்பினர். தேர்தல் அதிகாரிகள் தெருவில் கொட்டப்பட்ட புடவைகளையும் பறிமுதல் செய்தனர்.



விக்கிரவாண்டி தொகுதி ஆசாரங்குப்பத்தில் தி.மு.க.,வினர் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பதுக்கி வைத்திருந்த புடவைகளை பறிமுதல் செய்து, தெருவில் கொட்டி பா.ம.க.,வினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இதையடுத்து, திருவள்ளூர் மாவட்ட பா.ம.க., செயலர் பாலயோகி தலைமையில் கட்சி நிர்வாகிகள், தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கக் கோரியும், தி.மு.க., வேட்பாளரை தகுதிநீக்கம் செய்யக் கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த டி.எஸ்.பி.,க்கள் சுரேஷ், சுரேஷ் பாண்டியன், இன்ஸ்பெக்டர் ரேவதி மற்றும் காணை போலீசார் பா.ம.க.,வினரிடம் பேசி சமாதானம் செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட புடவைகளை, நிலைக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள், தொகுதி தேர்தல் அலுவலரிடம் ஒப்படைத்தனர். பின் அது கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இதுகுறித்து, பா.ம.க., வழக்கறிஞர் பாலு, சிவகுமார் எம்.எல்.ஏ., மற்றும் கட்சியினர், மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியான கலெக்டர் பழனியை நேற்று சந்தித்து, நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளித்தனர்.

## வேட்பாளரை தகுதி நீக்கம் செய்யணும்

விக்கிரவாண்டியில், தி.மு.க.,வினரால் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வேட்டி, சேலைகளை, பா.ம.க.,வினர் கைப்பற்றி அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். விக்கிரவாண்டியில் தோல்வியடைந்து விடுவோம் என்று அஞ்சி நடுங்கும் தி.மு.க., வாக்காளர்களை விலை கொடுத்து வாங்கவும், தேர்தல் நடைமுறையை சீர்குலைக்கவும் முயற்சிக்கிறது. இதற்கு அரசு அதிகாரிகள் துணைபோவது கண்டிக்கத்தக்கது.

லஞ்சம் கொடுத்ததற்காக, தி.மு.க., வேட்பாளரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.



அன்புமணி
தலைவர், பா.ம.க.,

Hoarded dhotis were seized by election officer. from DMK person house.